RG/MBD/1/81

2023.07.

சுற்றறிக்கை இலக்கம்: 04 / 2023

சகல பிரதேச செயலாளர்கள் / மாவட்ட பதிவாளர்கள் ஊடாக,
மேலதிக மாவட்ட பதிவாளர்கள் ஊடாக,
சகல வைத்திய பதிவாளர்கள் மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு பிரிவு பதிவாளர்களுக்கு

**தகனச்சாலை /மயான பூமி ஒதுக்குவதற்கான சான்றிதழ்களை வழங்குதல்.**

01. மேலே குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பாக சகல உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆணையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட M/10/විවිධ/පොදු/ම.ස./04/2014 இலக்க 2014.06.18 ஆந் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு பதிலாக 2023.07.01 ஆம் திகதியில் இருந்து இச்சுற்றறிக்கை நடைமுறைக்கு வருகின்றது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. மேல் குறிப்பிட்டுள்ள ஆலோசனைகள் கடதத்திற்கமைய தகனச்சாலை /மயான பூமி ஒதுக்கும் போது பீ 18, பீ 16 மற்றும் பீ 20 மாதிரிப் படிவங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களை பொறுப்பேற்று தகனச்சாலை /மயான பூமி ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சகல உள்ளூராட்சி நிறுவன மற்றும் மயான நிர்வாகிகளை (பொறுப்பாளர்களை) அறிவூட்டப்பட்டுள்ளது.

03. இந்த அறிவூட்டல் காரணமாக வைத்திய பதிவாளர்கள் மற்றும் பிறப்பு இறப்பு பதிவாளர்களினால் பீ 16 மற்றும் பீ 20 மாதிரிப் படிவங்கள் மூலம் சான்றிதழ்களை வழங்கும் போது அந்த மாதிரிப் படிவத்தில் பிரேத உடலை தகனம் செய்யப்படுமா அல்லது அடக்கம் செய்யப்படுமா என்பதை குறிப்பிட்டு சமர்ப்பிக்கும் படி உள்ளூராட்சி நிறுவனங்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையால் பதிவாளர்களினால் இந்த மாதிரிப் படிவங்களில் மேலதிக குறிப்பாக குறித்த பிரேத உடல் தகனம் செய்யப்படல் அல்லது அடக்கம் செய்யப்படல் தொடர்பான குறிப்பு எழுதுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

04. மரண பரிசோதகரால் வழங்கப்படுகின்ற பீ 18 மாதிரிப் படிவத்தில் பிரேத உடல் அடக்கம் செய்யப்படல் வேண்டுமா , தகனம் செய்யப்படல் வேண்டுமா என்ற குறிப்பொன்று இடப்படுவதுடன் மரண பரிசோதகரர்களுக்கு அத் தீர்ப்பினை வழங்கும் அதிகாரமும் காணப்படுகின்றது.

05. இருப்பினும் பீ 16 மற்றும் பீ 20 மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக பிரேத உடலை தகனம் செய்தல் அல்லது அடக்கம் செய்தல் தொடர்பாக தீர்மானித்து அதனை குறிப்பிடும் சட்டபூர்வ அதிகாரமானது வைத்திய பதிவாளர்கள் மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே இனிவரும் காலங்களில் சட்டபூர்வமற்ற எத்தகைய குறிப்பினையும் பீ 16 அல்லது பீ 20 மாதிரிப் படிவங்களில் இடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

06. பீ 18, பீ 16 , பீ 20 என்ற மாதிரிப் படிவங்களுக்கு மேலதிகமாக பீ 12 இறப்பிற்கான காரணத்தை குறிப்பிடுகின்ற வைத்தியர் சான்றிதழ், பீ 19 தோட்ட முகாமையாளரின் சான்றிதழ், பீ 17 பொலிஸ் உத்தியோகத்தர் / கிராம உத்தியோகத்தரின் சான்றிதழையும் ஏற்றுக்கொண்டு தகனச்சாலை/ மயானபூமி ஒதுக்கி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

07. இச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்த தங்களால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்தோடு இவ்விடயம் தொடர்பாக தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பை வரவேற்கின்றேன்.

டப்.ஆர்.ஏ.என்.எஸ்.விஜயசிங்ஹ
பதிவாளர் நாயகம்

பிரதி

| | |
|---|---|
| 01. செயலாளர், பொது நிர்வாக , உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - தகவலுக்காக |
| 02. சகல மாவட்ட செயலாளர்கள் | - தகவலுக்காக மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக |
| 03. சகல பிரதி பதிவாளர் நாயகங்கள் | - தகவலுக்காக மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக |
| 04 சகல மாவட்டங்களுக்கு பொறுப்பான பதிவாளர் நாயகங்கள் | - தகவலுக்காக மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக |
| 05. சகல உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள்/ செயலாளர்களுக்கு | - தகவலுக்காக மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக |